**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்.**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்க்ஷா, B.B.A.,LL.B (Hons).,**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2025 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 04 ஆம் நாள் வியாழக்கிழமை**
**குற்றவியல் பல்வகை மனு எண் 418/2025**

ஜெயகோபால் (வயது 35/2025)
த/பெ. நாராயணராஜ்,
694-A உடன்குடிரோடு,
திசையன்விளை. ...... மனுதாரர்/நிகழ்நிலை புகார்தாரர்/ஆட்சேபனையாளர்

/எதிர்/

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
தட்டார்மடம் காவல்நிலையம்,
குற்ற எண்.85/2022 ...... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

/இல்/

1) வசந்த்
2) கலைச்செல்வி ....... குற்றம் சாட்டப்பட்டவர்கள்/எதிரிகள்

இம்மனு 30.05.2025 ஆம் தேதி அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 08.11.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ஜெயச்சந்திரன் B.A.,LL.B அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலித்து, 04.12.2025 ஆம் தேதி இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது தட்டார்மடம் காவல்நிலைய குற்ற எண்.85/2022 இன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்ட நபராக குறிப்பிடப்பட்ட பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 3 நபர்கள் என குறிப்பிடப்பட்ட நபர்களை வழக்கில் இருந்து நீக்கியும், முதல் தகவல் அறிக்கையில் இருந்து இ.த.ச பிரிவுகள் 147, 148, 379 ஐ நீக்கி மற்றும் இ.த.ச பிரிவு 324 ஐ இ.த.ச பிரிவு 323 ஆக மாற்றம் செய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வழக்கை மீண்டும் சட்டப்படியாக புலன்விசாரணை செய்து தட்டார்மடம் காவல் ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தாக்கல் செய்த புகார்மனுவின் சுருக்கம்:**

மனுதாரரான ஜெயகோபால் திசையன்விளையில் அய்யா ஏஜென்ஸ் என்ற கடை நடத்தி வருகிறார். சுந்தர்ராஜன் என்பவர் நடுவக்குறிச்சி தாமரைமொழி மெயின்ரோட்டில் திருவாடுதுறை ஆதினத்திற்கு பாத்தியப்பட்ட இடத்தில் கடை அமைத்து

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.12.04 16:33:30 +0530

அதனை ஆண்டு அனுபவித்து வந்தார். அந்த இடத்தில் இருந்த கடையை 15.02.2022 ஆம் தேதி சுந்தர்ராஜன் மனுதாரருக்கு ஒப்பந்த மாற்று பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்தார். அந்த இடத்திற்காக திருவாடுதுறை ஆதினத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் அனைத்தையும் மனுதாரர் செலுத்தி உரிய முறைப்படி அனுபவித்து கொள்ள வேண்டியது என எழுதி கொடுத்தார். மேற்படி கடையில் வசந்த் மற்றும் அவருடைய மனைவி கலைச்செல்வி முருங்கைகாய் கமிஷன் கடை வைத்து நடத்தி வந்ததோடு காலி செய்ய மறுத்தும் வந்தார்கள். 23.02.2022 ஆம் தேதி காலை 8.30 மணிக்கு மனுதாரர் குத்தகை பெற்ற கடை முன்பு சென்ற போது மனுதாரரின் டிரைவர் முருகன், கடையின் மேனேஜர் ரீகன் மற்றும் ஜாண்சன் ஆகியோர்கள் இருந்தார்கள். மேலும், அங்கு வசந்த், அவரது மனைவி மற்றும் பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 3 நபர்கள் இருந்தார்கள். எதிரிகள் மனுதாரரைப் பார்த்து ஏலே தேவடியா மவனே புண்டா மவனே என ஆபாசமான வார்த்தைகளால் பேசி இது எங்களது கடை நீ உள்ளே நுழைந்தால் உன்னை வெட்டி கொலை செய்து விடுவோம் என மிரட்டல் விடுத்தார்கள். மேலும், வசந்த் கையில் வைத்திருந்த கம்பியால் மனுதாரரின் இடது முழங்கையில் அடித்தார். அவருடைய மனைவி மனுதாரரைப் பார்த்து நான் பெரிய ரவுடி என கூறி கையில் வைத்திருந்த அருவாளால் மனுதாரரை வெட்ட வந்தார். அவர்களுடன் இருந்த 3 நபர்களும் கம்பியால் மனுதாரரை தாக்கினார்கள். அவர்கள் அனைவரும் மனுதாரரைப் பார்த்து இனிமேல் இங்கு வந்தால் உயிரோடு திரும்ப முடியாது என்று கொலைமிரட்டல் விடுத்தார்கள். மனுதாரரின் வாகனத்தில் இருந்த பணம் ரூ.24,500/- காணாமல் போய்விட்டது. இது குறித்து எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கடந்த 26.02.2022 ஆம் தேதியன்று மனுதாரர் தட்டார்மடம் காவல்நிலையத்தில் புகார்மனு கொடுத்தார்.

பின்னிட்டு எதிரிகளான வசந்த் மற்றும் கலைசெல்விக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(i) இன் கீழான குற்றத்திற்கு குற்ற இறுதியறிக்கை கடந்த 19.05.2025 ஆம் தேதி தட்டார்மடம் காவல் உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்டது.

பின்னிட்டு குற்ற இறுதியறிக்கையை பரிசீலித்த போது, பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 3 நபர்கள் மற்றும் இ.த.ச பிரிவுகள் 147, 148, 379 ஐ நீக்கம் செய்து மற்றும் இ.த.ச பிரிவு 324 ஐ இ.த.ச பிரிவு 323 ஆக மாற்றம் செய்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்நீதிமன்றத்தில் இருந்து கடந்த 30.05.2025 ஆம் தேதி மனுதாரருக்கு மேற்படி எதிரிகள் நீக்கியது குறித்தும் சட்டப்பிரிவுகளை நீக்கியது குறித்தும் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் 26.06.2025 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவிக்குமாறு மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன் படி, கடந்த 17.10.2025 ஆம் தேதி மனுதாரர் ஆட்சேபனை மனுவினை தாக்கல்

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.12.04 16:33:36 +0530

செய்தார்.

**2) மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை விபரம்:-**

மனுதாரர் புகார்மனுவில் கூறியுள்ள சங்கதிகளை கூறி ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளார். மேலும், ஆட்சேபனை மனுவில், பார்த்தால் அடையாளம் காட்ட கூடிய 3 நபர்கள் என்று தெரிவித்த சேர்மதுரை, விநாயகம் மற்றும் முருகன் ஆகியோர்களை அடையாளம் காட்டிய பிறகும் காவல்துறையினர் அவர்களை எதிரிகளாக சேர்க்காமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரருக்கு சொந்தமான ஒன்றரை லட்சம் மதிப்புள்ள பர்னிச்சர் சாமான்களை எதிரிகள் எடுத்து சென்றுள்ளதாகவும், எனவே, வழக்கை மீண்டும் சட்டப்படியாக புலன்விசாரணை செய்து தட்டார்மடம் காவல் ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறு ஆட்சேபனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

4. இம்மனுவை அனுமதிக்க போதிய காரணம் உண்டா என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

**5. தீர்வு**

மனுதாரர் தாக்கல் செய்த புகார்மனுவினை பரிசீலனை செய்யும்போது, மனுதாரர் 23.02.2022 ஆம் தேதி காலை 8.30 மணியளவில் நடைபெற்ற வழக்கு சம்பவத்திற்கு 26.02.2022 ஆம் தேதி 12.00 மணிக்கு தட்டார்மடம் காவல்நிலையம் சென்று புகார்மனு அளித்துள்ளது புலப்படுகிறது. அந்த புகார்மனுவை பெற்றுக்கொண்ட காவல்துறையினர் அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.85/2022, இ.த.ச பிரிவுகள் 147, 148, 294(b), 324, 379, 506(ii) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள். அந்த முதல் தகவல் அறிக்கையினை பரிசீலனை செய்யும்போது, அதில் குற்றம்சாட்டப்பட்ட நபர்களாக வசந்த், கலைச்செல்வி (எ) செல்வி மற்றும் பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 3 நபர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்ற இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட எதிரிகள் நீக்கல் அறிக்கையினை பரிசீலனை செய்யும்போது, மனுதாரர் ஜெயகோபால் அவருடைய புகார்மனுவில் எதிரிகள் வசந்த், கலைச்செல்வி, சிவா, முருகேசன் (எ) குமார் மற்றும் பாப்பா ஆகியோர்கள் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக தெரிவித்துள்ளார் என்றும், ஆனால் சம்பவத்தில் ஈடுபட்டது வசந்த் மற்றும் கலைச்செல்வி மட்டுமே என்று சிவா, முருகேசன் (எ) குமார் மற்றும் பாப்பா ஆகியோர்கள் கடையில் இருந்தார்களே தவிர சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று தெரிவித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.12.04 16:33:39 +0530

ஆனால், மனுதாரர் தாக்கல் செய்த புகார்மனுவினை பரிசீலனை செய்யும்போது, *வசந்த், கலைச்செல்வி மற்றும் பார்த்தால் அடையாளம் காட்டக்கூடிய 3 நபர்கள் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளாரே தவிர காவல்துறையினர் கூறுவது போல் சிவா, முருகேசன் (எ) குமார் மற்றும் பாப்பா ஆகியோர்கள் குறித்து அவர் புகார்மனுவில் எதுவும் குறிப்பிடவில்லை. மேலும், புகார்மனுவில் அந்த 3 நபர்களின் பெயரை ஒரு இடத்தில் கூட மனுதாரர் குறிப்பிடவில்லை.* மேலும், மனுதாரர் தாக்கல் செய்த ஆட்சேபனை மனுவில் பார்த்தால் அடையாளம் காட்ட கூடிய 3 நபர்கள் என சேர்மதுரை, விநாயகம் மற்றும் முருகன் ஆகியோர்களின் பெயர்களை குறிப்பிட்டுள்ளார். ஆகையால், புலன்விசாரணை அதிகாரி முறையாக புலன்விசாரணை செய்யாமல் இயந்திரத்தனமாகவும், ஒருதலைபட்சமாகவும் செயல்பட்டு குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளாரோ? என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

ஆகையால், இவ்வழக்கின் சாராம்சத்தை பரிசீலனை செய்ததில், இம்மனுவை அனுமதிக்க போதிய முகாந்திரங்கள் இருப்பதாக கருதி, மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் பால் சிறந்தது என்று நீதிமன்றம் முடிவு செய்து, மனுவை அனுமதித்து உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

தட்டார்மடம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் கூடுதல் புலன்விசாரணை மேற்கொண்டு 05.01.2026 ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 04 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.12.04 16:33:44 +0530

நீதித்துறை நடுவர்,
சாத்தான்குளம்.